**TAMIL NADU POLLUTION CONTROL BOARD**

**O/o. District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Maraimalai Nagar**

**Minutes of Public Hearing Conducted for Proposed Rough Stone quarry of Tvl.Triway Warehouses & Holdings Pvt Ltd at S.F. Nos.14/1A, 14/1B, 14/2 & 15/3, Netrambakkam Village, Madhurandhagam Taluk, Chengalpattu District on 6.12.2024 at 11.00 AM at T/L. Sri Saraswathi Mahal Wedding Hall, Madhurandhagam Salai, Netrambakkam Village, Madhurandhagam Taluk, Chengalpattu District**

**Details of the Project:**

| S. No | Name and location of the Proposed quarry | Extent in Ha |
|---|---|---|
| 1 | Tvl.Triway Warehouses & Holdings Pvt Ltd Ordinary Stone and Gravel Quarry at Survey Nos. 14/1A, 14/1B, 14/2 & 15/3 Netrambakkam Village, Madhurandhagam Taluk, Chengalpattu District. | 4.54.0 |

**Venue:** M/s. Sri Saraswathi Mahal, S.H.49, Madhurandhagam Road, Netrambakkam Village, Madhurandhagam Taluk, Chengalpattu District

**Date and Time:** 06/12/2024, 11.00 AM

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt.S.Ramya | : | Revenue Divisional Officer, Madhurandhagam . |
| 2. | Thiru.G.Udhayakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar, Chengalpattu District. |
| 3. | Thiru.M.Balasubramaniyan | | Assistant Geologist Department of Mineral Resources |
| 4. | Thiru.Thirumurthy Inbaraj | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar, Chengalpattu District. |

| | | | |
|---|---|---|---|
| 5. | Thiru.Manivasagan | | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Maraimalai Nagar, Chengalpattu District. |
| 6. | Thiru.Senthilnathan | | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Maraimalai Nagar, Chengalpattu District. |
| 7. | Public | : | 107 Persons **(Copy of Attendance is enclosed).** |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalainagar welcomed the Revenue Divisional Officer, Madurantakam, other Government Officials, Public, Social & Environmental activists for the Public Hearing and informed that the Proponent Tvtl.Triway Warehouses & Holdings Pvt Ltd has approached the State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed proposed rough stone and Gravel Quarry, at S.F. Nos. 14/1A, 14/1B,14/2 & 15/3 over an extent of 4.54 Ha, Netrampakkam Village, Maduranthagam Taluk, Chengalpattu District. In this regard, the SEIAA-TN in its letter dt.08.02.2024 has issued Terms of Reference (TOR) subject to one of the condition that the proponent shall prepare an EIA report and also to conduct a Public Hearing among than public in that area and address the concerns raised during the public hearing to SEIAA-TN. Based on that, the public hearing was arranged on 06.12.2024 and public notices have been issued as mandated in the news paper namely "Deccan Chronucle" (English) & "Daily Thanthi (Tamil)" on 29.10.2024.

Then the DEE, TNPCB informed that on behalf of project proponent, the Project Consultant will make power point presentation about the said proposed project and the public present can express their views, concerns and questions if any by indicating their name and village from where he /she comes from. It was also informed that the proceedings of the entire meeting will be recorded.

After that, the project consultant Thiru. M. Thangamani explained about the proposed project through a power point presentation before the public present during public hearing.

The views, concerns, questions and comments of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1 | **Jagadhesan, Netrampakkam Village.** | I live in two villages, Netrambakkam and Nallampur. I have land in both villages. I live in both places. In this public |

| | | |
|---|---|---|
| | | hearing meeting, they talked about the permission for this Triway quarry. Many benefits have come from the quarry. We have collected donations for special events like Kumbabishekam. We have gone for festivals. I do not have any problem during the blasting. There are 3 residential areas in Netrambakkam where there is a problem that bothers me is the water is not clean. In my opinion, it would be very beneficial if an RO plant were set up in these three residential areas. Otherwise, I have no problem with setting up this quarry. There are crushers in 10–20 surrounding villages and they have also done some good for schools. In this climate, many people are getting fever, so this water is a little suspicious. If they fix it and runs without any problems as they are doing now, it would be very beneficial. Thank you. |
| 2 | **Baskar,<br>Netrampakkam Village.** | The crusher has been going on for many years and they are going to start another crusher. We mainly need RO water, cement roads should be constructed, solar lights should be installed for the Amman temples there, otherwise nothing. Thank you for giving me this opportunity. |
| 3 | **Udhayakumar.<br>Netrampakkam Village.** | Since this crusher started, about 17 people have been working here. Economically, this crusher has helped. Now they are starting another one. Similarly, we are proud that the trees and plants around the crusher are under our supervision. They have said that they will provide employment to another 50–60 people. We will be very happy if that comes. Apart from that, we had a lot of difficulty in getting drinking water for |

| | | |
|---|---|---|
| | | some time. There was no electricity anywhere, but since we are in that crusher, we took water from there and gave it to our house, so we welcome the arrival of this crusher. |
| **4** | **Environmental Activist.** | As an Environmental Activist, first of all, I would like to greet everyone in this House. It is the duty of this government to resolve problems immediately. Employment opportunities should be arranged immediately and houses should be provided to the common people in the vicinity. Green houses should be provided and everyone should take up tree planting. I humbly request the government officials to do the needful. |
| **5** | **Vijayakumar**. | I have been working here for three years and no one has been harmed. We have not had any problems with the establishment of this quarry. |
| **6** | **Resident of Netrampakkam Village.** | We have been living next to this quarry for three years. There has been no problem from this quarry. They have been providing jobs to the people living nearby for a year and there is no water problem. |
| **7** | **Janagavalli, Netrampakkam Village.** | There is no problem with this crusher coming. Everything is going well. There is a little dust and so the fields are affected a little. Other than that, there is no problem. There is a little amount of powder coming near the house. There is no problem with the quarry running. It is because to help the people. |
| **8** | **Baskar, Netrampakkam panchayath union head.** | This crusher has been going on for three years. There is no harm in this. They are doing a lot of help to the temples. we are asking for RO water. They have also said that they will provide it. It would be great |

| | | |
|---|---|---|
| | | if all that happens. There is no problem. |
| 9 | **Sivasankar, kondampatti Village.** | Everyone is happy with the arrival of this crusher. It will provide employment opportunities for about 15 people, so it will be good for us if this crusher comes. |
| 10 | **Resident of Netrampakkam Village.** | I have been a driver in this crusher for two years and there is no problem till now. They provide all the facilities and no one is affected. All the drivers have come here and no one has any problem. The management is also good. Thank you and greetings. |
| 11 | **Dhanamaari, Netrampakkam Village.** | There is a crematorium near our house, but there is no proper road access near it. If it rains, it will be more difficult to access. It would be great if they could fix that. |

The public hearing meeting was concluded with thanks to the Revenue Divisional Officer, Madurantakam, Officials, Public and NGO's attended and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting, written petitions along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai. The proponent has reported that the EIA will be revised on the query raised in this Public Hearing and will be submitted to the SEIAA-TN.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the public hearing meeting are enclosed herewith.

With this, the public consultation meeting concluded

The following persons have furnished their views in written statements / letter (Copy enclosed)

| S.No. | Name | Address |
|---|---|---|
| 1. | Haritha Educational Rural Welfare Society | 11-131, Indira Nagar, Uravakonda – 515812, Anathapuramu Dist (A.P) |

| | | |
|---|---|---|
| 2. | Public | 179, Netrampakkam Village, Madhuranthagam Taluk, Chengalpattu District. |
| 3. | Uday Environmental Rural Development Society | 1-70, B.C.Colony, Brahmanapalle, Gooty, Ananthapur, Andhra Pradesh – 515401. |

**Other Enclosures:**

1) Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 29/10/2024)
2) Copy of Attendance sheet of the public hearing meeting along with photographs and DVD Disc recorded with the entire proceedings of public hearing.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Maraimalai Nagar**

**Revenue Divisional Officer,**
**Madhurandhagam,**
**Chengalpattu District**

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
மறைமலைநகர்

**பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்**

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெட்ரம்பாக்கம் கிராமம், , க.ச.எண்.14/1A, 14/1B, 14/2 & 15/3 பரப்பளவு 4.54.0 ஹெக்டேர். திருவாளர். ட்ரைவே வேர் ஹவுஸ் & ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் 06/12/2024 அன்று காலை 11.00 மணி அளவில் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதுராந்தகம் சாலை, தி/ள். ஸ்ரீ சரஸ்வதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்.

**திட்ட விவரங்கள்:**

| வ.எண். | முன்மொழியப்பட்ட குவாரியின் பெயர் மற்றும் இடம் | குவாரியின் அளவு (ஹெக்டர்) |
|---|---|---|
| 1. | Triway Warehouses & Holdings Pvt Ltd சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, சர்வே எண்கள் 14/1A, 14/1B, 14/2 & 15/3, நெட்ரம்பாக்கம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம். | 4.54.0 |

இடம்; தி/ள். ஸ்ரீ சரஸ்வதி மஹால், S.H.49, மதுராந்தகம் சாலை, நெட்ரம்பாக்கம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.
நாள் மற்றும் நேரம்: 06/12/2024, காலை – 11.00 மணி

**பங்கேற்றோர்:**
**திருவாளர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி.S.ரம்யா | : | வருவாய் கோட்டாட்சியர், மதுராந்தகம் |
| 2. | திரு. கோ. உதயகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர் |
| 3. | திரு.M. பாலசுப்பிரமணியன் | : | உதவி புவியியளாளர், கனிம வளத்துறை |
| 4. | திரு.திருமூர்த்தி இன்பராஜ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர் |
| 5. | திரு.மணிவாசகன் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர் |
| 6 | திரு.செந்தில்நாதன் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர் |
| 7 | பொது மக்கள் | : | 107 நபர்கள் (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வருகை தந்துள்ள மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெட்ரம்பாக்கம் கிராமம், , க.ச.எண்.14/1A, 14/1B, 14/2 & 15/3 பரப்பளவு 4.54.0 ஹெக்டேர். திருவாளர். ட்ரைவே வேர் ஹவுஸ் & ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 29.10.2024 அன்று "**தினத்தந்தி**" என்கின்ற தமிழ் நாளிதழிலும் மற்றும் "**டெக்கான் குரோனிகல்**" என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 06.12.2024 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் அதனை சார்ந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்து இத்திட்ட ஆலோசகர் திரு.தங்கமணி, பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்

**<u>பொதுமக்களின் கருத்து மற்றும் கோரிக்கைகள்</u>**

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | **ஜெகதீசன்,**<br>**நெட்ரம்பாக்கம் கிராமம்** | நான் நெட்ரம்பாக்கம் மற்றும் நல்லாம்பூர் ஆகிய இரண்டு கிராமங்களிலும் வசித்து வருகிறேன். இரண்டு கிராமங்களிலும் எனக்கு நிலம் உண்டு. இரண்டு இடத்திலும் நான் வாழ்ந்து வருகிறேன். இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில் இந்த Triway சுரங்கம் அனுமதி பற்றி பேசினார்கள். சுரங்கம் அமைந்ததால் பல நன்மைகள் நடந்திருக்கின்றது கும்பாபிஷேகம் போன்ற விஷேஷங்களுக்கு நன்கொடை வாங்கி செய்திருக்கின்றோம் திருவிழாவிற்காக சென்றிருக்கின்றோம். வெடி வைக்கும் போது கூடும் எனக்கு பிரச்சனை வரவில்லை எனக்கு மனசுக்கு படுகின்ற பிரச்சனை இருக்கின்ற நெட்ரம்பாக்கத்தில் 3 குடியிருப்பு பகுதி இருகின்றது. அதில் தண்ணீர் சுத்தம் இல்லாத மாதிரி இருக்கின்றது. இந்த மூன்று குடியிருப்பு பகுதிகளிலும் ஒரு RO பிளான்ட் அமைத்து கொடுத்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. மற்றபடி இந்த குவாரி அமைவதில் எனக்கு எந்த வித இடையூறும் இல்லை. சுற்றியுள்ள 10–20 கிராமங்களிலும் கிரஷ்ஷர்கள் உள்ளது பள்ளிகளுக்கும் சில நன்மைகள் செய்து உள்ளார்கள். இந்த காலநிலையில் நிறைய |

| | | |
|---|---|---|
| | | மக்களுக்கு காய்ச்சல் வருகிறது ஆதலால் இந்த தண்ணீர் மேலேதான் கொஞ்சம் சந்தேகமாக இருக்கின்றது அதை சரிப்படுத்தி கொடுத்துவிட்டு இப்பொழுது நடக்கும் படியே எந்த தொந்தரவும் இல்லாமல் வீடுகள் அதிராதவாறு நடத்திக் கொண்டால் மிகவும் நன்மையாக இருக்கும். நன்றி வணக்கம். |
| 2 | **பாஸ்கர், நெட்ரம்பாக்கம் கிராமம்** | பல ஆண்டுகளாக கிரஷ்ஷர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது மீண்டும் ஒரு கிரஷ்ஷர் ஆரம்பிக்க போகிறார்கள். எங்களுக்கு முக்கியமாக RO தண்ணீர் தேவை, சிமெண்ட் சாலைகள் அமைத்து தர வேண்டும், அங்கு அம்மன் கோவில்களுக்கு சோலார் விளக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும் மற்றபடி ஒன்றுமில்லை வாய்ப்பு அளித்ததற்கு நன்றி |
| 3 | **உதயகுமார்** | இந்த கிரஷ்ஷர் ஆரம்பித்து கிட்டத்தட்ட 17 பேர் இங்கே வேலை செய்கின்றோம் பொருளாதார அடிப்படையில் இந்த கிரஷ்ஷர் ஆரம்பித்தது உதவியாக இருக்கிறது. இப்பொழுது புதிதாக இன்னொன்று ஆரம்பிக்கிறார்கள் அதே போல கிரஷ்ஷரை சுற்றி மரம் செடி கொடிகள் எங்களுடைய கண்காணிப்பில் இருப்பது எங்களுக்கு பெருமையாக உள்ளது. இன்னும் ஒரு 50–60 பேருக்கு வேலைவாய்ப்பு தருவதாக கூறியுள்ளார்கள் அது வந்தால் மிகவும் சந்தோஷம். அதை தாண்டி நாங்கள் சில காலம் குடிநீருக்கு மிகவும் சிரமப்பட்டோம் எங்கேயுமே மின்சாரம் இல்லை ஆனால் அந்த கிரஷ்ஷரில் இருந்ததால் அங்கிருந்து தண்ணீர் எடுத்து எங்கள் வீட்டிற்கு கொடுத்தோம் அதனால் இந்த கிரஷ்ஷர் வருவதை நாங்கள் வரவேற்கின்றோம் |
| 4 | **சுற்றுசூழல் ஆர்வலர்** | சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயலாளராக முதலாவதாக இந்த சபையில் உள்ள அனைவருக்கும் எனது வணக்கம். உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைப்பது இந்த அரசாங்கத்தின் கடமையாகும். வேலை வாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்து அருகாமையில் பொது மக்களுக்கு வீடுகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பசுமை வீடுகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் மரங்கள் வளர்ப்பதை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதை அரசு உயர் அதிகாரிகளிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் |
| 5 | **விஜயகுமார்.** | நான் மூன்று வருடமாக இங்கு வேலை செய்து வருகிறேன், யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. இந்த குவாரி அமைவதால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை |
| 6 | **நெட்ரம்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர்** | மூன்று வருடங்களாக இந்த குவாரிக்கு பக்கத்தில் தான் இருக்கின்றோம். இந்த குவாரியில் இருந்து ஒரு பிரச்சனையும் இல்லை. ஒரு வருஷமா பக்கத்தில் இருகின்றவர்களுக்கு வேலையெல்லாம் கொடுத்து இருக்கிறார்கள் தண்ணீர் பிரச்சனையும் இல்லை |

| | | |
|---|---|---|
| 7 | ஜனகவல்லி, நெட்ரம்பாக்கம் கிராமம் | இந்த கிரஷர் வருவதால் எந்த பிரச்சனையும் இல்லை எல்லாம் நன்றாக நடந்து கொண்டுதான் இருக்கிறது தூசி மற்றும் கொஞ்சம் படிகிறது. அதனால் விளை நிலங்கள் கொஞ்சம் பாதிப்படைகிறது. வேறு எதுவும் பிரச்சனை இல்லை. வீட்டிற்கு பக்கத்தில் கொஞ்சம் பவுடர் வருகிறது . மற்றபடி அந்த குவாரி நடப்பதில் எந்த பிரச்சனையும் இல்லை அது மக்களுக்கு உதவி காரணமாக தான் இருக்கிறது |
| 8 | பாஸ்கர் , நெட்ரம்பாக்கம் கிராமம் பஞ்சாயத்து தலைவர் | இந்த கிரஷ்ஷர் மூன்று வருடமாக நடந்து கொண்டிருக்கிறது. இதனால் எந்த பாதிப்பும் இல்லை கோவில்களுக்கு நிறைய உதவிகள் செய்கிறார்கள் இப்பொழுது RO தண்ணீர் சொல்லி இருக்கின்றோம் அவர்களும் செய்து கொடுப்பதாக கூறியிருக்கிறார்கள் அதெல்லாம் நடந்தால் நன்றாக இருக்கும். எந்த பிரச்சனையும் இல்லை |
| 9 | சிவசங்கர், கொண்டாம்பட்டி கிராமம் | இந்த கிரஷ்ஷர் வருவதால் எல்லாருக்கும் மகிழ்ச்சி. ஒரு 15 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் அதனால் இந்த கிரஷ்ஷர் வந்தால் எங்களுக்கு நல்லது |
| 10 | நெட்ரம்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் | நான் இந்த கிரஷ்ஷரில் இரண்டு வருடங்களாக டிரைவராக இருக்கின்றேன் ஒரு பிரச்சனையும் இல்லை எல்லா வசதிகளும் செய்து தருகிறார்கள் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. எல்லா டிரைவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள் யாருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. நிர்வாக பொறுப்பும் நன்றாக இருக்கின்றது. நன்றி வணக்கம் |
| 11 | தனமாரி, நெட்ரம்பாக்கம் கிராமம் | எங்கள் வீட்டிற்கு அருகில் சுடுகாடு இருக்கின்றது அதற்கு சரியான சாலை வசதி இல்லை மழை பெய்தால் அந்த பக்கம் ஒழுங்காக போக முடியவில்லை அதை மட்டும் கொஞ்சம் சரி செய்தால் நன்றாக இருக்கும் |

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், ஏனைய அரசுதுறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமுக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல், தாக்க மப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கோரிக்கையாக பெறப்பட்ட புகார் மனுக்கள் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட கடிதங்கள் கூட்டத்தின்போது நேரடியாக மக்களால் கொடுக்கப்பட்டது. கீழ்க்கண்ட நபர்கள் / அமைப்புகள் தங்கள் கடிதங்களை அளித்தன (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

| வ. எண். | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1. | ஹரிதா கல்வி கிராமப்புற நலன்புரி சங்கம் | 11–131, இந்திரா நகர், உரவகொண்டா – 515812, அனந்தபூர் மாவட்டம் (A.P) |
| 2. | பொது மக்கள் | 179, நெட்ரம்பாக்கம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், |
| 3. | உதய் சுற்றுச்சூழல் ஊரக வளர்ச்சி சங்கம் | 1–70, பி.சி.காலனி, பிராமணப்பள்ளி, கூடி, அனந்தபூர், ஆந்திரப் பிரதேசம் – 515401. |

இதர இணைப்புகள்.

1. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் பற்றி 29/10/2024–ஆம் நாளிட்ட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் வெளிவந்த அறிவிப்பின் நகல்
2. வருகை பதிவேட்டின் நகல், புகைப்படங்கள் மற்றும் நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்ட டிவிடி தட்டுகள்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

வருவாய் கோட்டாட்சியர்
மதுராந்தகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.